**தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.**

ந.க.எண்.5510/சி1/2021,                நாள்.13.01.2022.

......

பொருள்: தொடக்கக் கல்வி - நிதியுதவி பெறும் துவக்க/நடுநிலைப் பள்ளிக்ளுக்கு 2021-2022ஆம் ஆண்டு இறுதி கற்பிப்பு மற்றும் பராமரிப்பு மானியம் விடுவித்தல் சார்பான அறிவுரைகள்- சார்ந்து.

பார்வை: 1. அரசாணை எண்.1228, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, நாள்.30.12.1994.

2.அரசாணை எண்.174, பள்ளிக் கல்வித் (பி2) துறை, நாள்.23.06.2000.

3. அரசாணை எண்.231, பள்ளிக் கல்வித் துறை, நாள்.11.08.2010.

4. அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வித்துறை, நாள்.18.05.2018.

5,. அரசாணை (நிலை) எண்.108 பள்ளிக் கல்வித்துறை, நாள்.28.05.2018.

6.அரசாணை (நிலை) எண்,261, பள்ளிக் கல்வித் (பக6) துறை, நாள். 20.12.2018.

7.அரசாணை (நிலை) எண்,119, பள்ளிக் கல்வித் (தொ,க,2(2) துறை நாள்.29.06.2019.

8.தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள். ந.க.எண்.005510/ சி1/2021, நாள்.12.04.2021.

9.தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.005510/சி1/2021 நாள்.10.05.2021.

.....

பார்வை4ல் கண்ட அரசாணையின்படி தொடக்கக் கல்வித் இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிதியுதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு இறுதிக் கற்பிப்பு மானியம் மற்றும் பராமரிப்பு மானியம் விதிகளின்படி கணக்கிட்டு சரியான முறையில் வழங்கப்பட வேண்டியது மாவட்டக் கல்வி அலுவலர்களின் மிக முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

பார்வை-8 மற்றும் 9-ல் கண்டுள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, அரசு நிதியுதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கான பராமரிப்பு மானியம் 2021-2022ஆம் ஆண்டிற்கு 37 மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. கடைசியாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை மாவட்டத்திற்கு நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலர் பிரித்து வழங்க தெரிவிக்கலாகிறது.

பார்வை9ல் கண்டுள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியம் விடுவிக்க ஏற்கனவே அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிதியுதவி பெறும் தொடக்க நடுநிலைப்பள்ளிகளுக்கு குறித்த காலத்தில் இறுதி கற்பிப்பு மானியம் மற்றும் பராமரிப்பு மானியம் விடுவிக்க

வேண்டியுள்ளதால் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தத்தம் ஆளுகைக்குட்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு அறிவுரைகளை வழங்கி இறுதி கற்பிப்பு மானியத்தினை விடுவித்திட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1.இறுதி கற்பிப்பு மானியம்**

**அ) மாவட்டக் கல்வி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்:**

1. சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் தத்தம் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளை ஆய்வு செய்துள்ளனரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. நால்வகைச் சான்றுகள் நடப்பு ஆண்டிற்கு பெறப்பட்டுள்ளதா என்பதை வட்டாரக் கல்வி அலுவல;ர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதை மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.
3. பள்ளியில் உள்ள பணியிடங்கள் அனைத்தும், அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களா (அரசு மானியம் பெறும் பணியிடங்கள்) என்பதை உறுதி செய்ய வேண்டும். அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை மற்றும் இயக்குநரின் செயல்முறைகள் ஆகியன வட்டாரக் கல்வி அலுவலரின் ஆய்வின் போது தவறாமல் கண்டறியப்பட வேண்டும்.
4. கைத்தொழில் ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உபயோகமான முறையில் உள்ளனரா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
5. ஒரு காலண்டர் ஆண்டு அடிப்படையில் கணக்கிடப்பட்டு பெற்ற மானியம் சரி பார்க்கப்பட வேண்டும்..
6. வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஒன்றியம் வாரியாக ஒரு தொகுப்பறிக்கையினையும், ஒவ்வொரு பள்ளி சார்பாக தனித் தனியாகவும் இறுதி கற்பிப்பு மானிய அறிக்கையினை மாவட்டக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7, வட்டாரக் கல்வி அலுவலர்களின் அறிக்கையினைப் பெற்றுக் கொண்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள், கல்வி மாவட்டம் வாரியாக ஒரு தொகுப்பறிக்கையினையும், ஒவ்வொரு பள்ளி சார்பாக தனித் தனியாகவும் இறுதி கற்பிப்பு, மானிய அறிக்கையினை முதன்மைக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**ஆ) இறுதி கற்பிப்பு மானியத்தின் போது முதன்மைக் கல்வி அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்.**

1. அரசு நிதயுதவிபெறும் தொடக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் நியமனங்கள் பதவி உயர்வு மற்றும் வேலை வாய்ப்பு மூலம் நியமனம் செய்திருப்பின் அவர்கள் 5 ஆண்டு பணி முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியருக்கான கற்பிப்பு மானியம் வழங்கப்படும் போது அப்பள்ளி முழு நிதியுதவியிடன் கூடிய முழுமை பெற்ற நடுநிலைப்பள்ளியாக செயல்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. ஒரு நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்படும் போது, நிலையிறக்கம் செய்யப்பட்ட துவக்கப்பள்ளிக்கு அரசாணை எண்.5 மற்றும் 50ன் படி இயக்குநரால் தலைமை ஆசிரியர் பணியிடம் நிலையுயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. கைத்தொழில் ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் முழு நேர ஆசிரியர்களா எனவும் , அவ்வாசிரியர்கள் மாணவர்களுக்கு உபயோகமான முறையில் உள்ளனரா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.
5. கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருந்தால் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இன்படி மாணவர்கள் எண்ணிக்கை 100 க்கும் மேல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
6. ஆசிரியர்களின் சேமநலநிதிக் கணக்கின் போது, வழங்கப்பட்ட தொகைகள் அனைத்தும் இணக்கம் (Reconciliation) செய்யப்பட்டிருக்க வேண்டும். சார்நிலைக் கருவூலத்தில் TNTC 70 மூலம் வழங்கப்பட்ட தொகைக்கும், உதவி பெறும் பள்ளிகள் பெற்ற மானியத்திற்கும் இடையில் வித்தியாசம் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**2. பராமரிப்பு மானியம்**

இறுதி கற்பிப்பு மானியம் வழங்கும் பணி முடிந்த பின்னர் பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியம் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

- ❖ பராமரிப்பு மானியம் நிர்ணயிக்கும் போது, அவ்வப்போது பள்ளிக்கென வழங்கப்பட்ட சொத்துக்களில் இருந்து கிடைக்கப்பெறும் ஆண்டு வருமானத்தையும் கணக்கில் கொள்ளல் வேண்டும்.
- ❖ பராமரிப்பு மானியம் அரசாணை நிலை எண் 119, பள்ளிக் கல்வித் (தொ.க2(2)துறை, நாள் 29.6.2019இன் படி செய்தல் வேண்டும்.

**இறுதி கற்பிப்பு மானியப் பட்டியல் சரிபார்க்க மற்றும் பராமரிப்பு மானியம் வழங்க அந்தந்த மாவட்டங்களில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கைக்கேற்ப கீழ்க்கண்டவாறு கால அவகாசம் வழங்கப்பட்டு தேதிகள் நிர்ணயம் செய்யப்படுகிறது.**

| 401 முதல் 1200 வரை உள்ள பள்ளிகள் கொண்ட மாவட்டங்கள் | விவரம் | கால அளவு | நாட்கள் |
|---|---|---|---|
| | முதல் மற்றும் இரண்டாவது பரிசீலனை அவற்றில் குறிப்பிட்ட குறைகளை நிவர்த்திச் செய்தல் சான்றிதழ் சரிபார்த்தல், கற்பிப்பு மானியப் பட்டியலும், பராமரிப்பு மானியமும் இறுதி வடிவம் செய்தல் | 5 நாட்கள் | 24.02.2022 முதல் 02.03.2022 |
| | இறுதி கற்பிப்பு மானியத்தில் நிலுவைத் தொகை இருப்பின் அவற்றிற்கான ஆணையினையும், பராமரிப்பு மானியம் விடுவிப்பதற்கான ஆணையும் வழங்குதல் | 2 நாட்கள் | 03.03.2022 முதல் 04.03.2022 |
| 100 முதல் 400 வரை உள்ள பள்ளிகள் கொண்ட மாவட்டங்கள் | முதல் மற்றும் இரண்டாவது பரிசீலனை அவற்றில் குறிப்பிட்ட குறைகளை நிவர்த்திச் செய்தல், சான்றிதழ் சரிபார்த்தல், கற்பிப்பு மானியப் பட்டியலும், பராமரிப்பு மானியமும் இறுதி வடிவம் செய்தல் | 2 நாட்கள் | 24.02.2022 முதல் 25.02.2022 |
| | இறுதி கற்பிப்பு மானியத்தில் நிலுவைத் தொகை இருப்பின் அவற்றிற்கான ஆணையினையும், பராமரிப்பு மானியம் விடுவிப்பதற்கான ஆணையும் வழங்குதல் | 1 நாள் | 28.02.2022 |
| 100 க்கும் கீழ் பள்ளிகள் கொண்ட மாவட்டங்கள் | விவரம் | கால அளவு | நாட்கள் |
| | முதல் மற்றும் இரண்டாவது அவற்றில் குறிப்பிட்ட குறைகளை நிவர்த்திச் செய்தல், சான்றிதழ்கள் சரிபார்த்தல், கற்பிப்பு மானியப் பட்டியலும், பராமரிப்பு மானியமும் இறுதி வடிவம் செய்தல் | 1 நாள் | 24.02.2022 |
| | இறுதி கற்பிப்பு மானியத்தில் நிலுவைத் தொகை இருப்பின் அவற்றிற்கான ஆணையினையும், பராமரிப்பு மானியம் விடுவிப்பதற்கான ஆணையும் வழங்குதல் | 1 நாள் | 25.02.2022 |

- ❖ உயர்கல்விக்கான ஊக்க ஊதியம் தற்காலிக பட்டச் சான்றின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், இரண்டாண்டு காலக் கெடுவுக்குள் அசல் பட்டச் சான்றினை முன்னிலைப்படுத்தியிருக்க வேண்டும். அக்கால கெடுவுக்குள் முன்னிலைப்படுத்தப்படவில்லை எனில், வழங்கப்பட்ட ஊதியத்தை பிடித்தம் செய்திடல் வேண்டும். மேலும் அசல் பட்டச் சான்றின் உண்மைத் தன்மையினை அறிந்திருக்க வேண்டும்.
- ❖ ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு மறுநியமன ஆணை வழங்கிருப்பின், மறுநியமன ஊதியம் குறித்து, மாநிலக் கணக்காயரால் அனுமதி ஆணை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
- ❖ அரசாணை நிலை எண் 261, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.12.2018 இன்படி மாணவர்களின் நலன் கருதி அரசுக் கொள்கை முடிவின்படி 60 வயது நிறைவுச் செய்த ஆசிரியர்களை அக்கல்வியாண்டு முடியும் வரை மறுநியமனம் செய்யும்போது உபரி ஆசிரியர் பணியிடங்கள் இருக்கும்போது மறு நியமனம் செய்யக்கடாது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❖ மாநிலக் கணக்காயர் மற்றும் துறைத் தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திச் செய்யப்படவில்லையெனில் இவ்விறுதி கற்பிப்பு மானியத்தில் பிடித்தம் செய்வது குறித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ❖ பள்ளியின் நிரந்தர / தற்காலிக அங்கீகாரங்கள் பற்றி குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடும் போது, அங்கீகாரம் எண்ணையும், தற்காலிகம் எனில் தொடர் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும். தொடர் அங்கீகாரம் இல்லாத பள்ளிகளுக்கு தொடர் அங்கீகார ஆணை பெற்ற பின்னரே கற்பித்தல் மானியம் குறித்த ஆணை பிறப்பித்தல் வேண்டும்.
- ❖ நிரந்தர அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் நால்வகைச் சான்றுகளையும் நடப்பு ஆண்டு வரை பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு பெற்ற பின்னரே கற்பித்தல் மானியம் குறித்த ஆணை பிறப்பித்தல் வேண்டும்.
- ❖ சுயநிதிப் பிரிவு / சுயநிதிப் பள்ளிகளுக்கு மானியம் ஏதும் வழங்குதல் கூடாது.
- ❖ கல்வி முகவாண்மை பதிவு / மாற்றம் / தற்போதைய நிலை ஆகியவற்றினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அரசாணை எண். 231, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11.08.2010 இன்படி மாவட்டக் கல்வி அலுவலரால் பணியாளர் நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட ஆணையினை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, கற்பிக்கும் வகுப்பு, பணியில் சேர்ந்த தேதி, ஊதிய விகிதம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.
- ❖ விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட துறை ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மட்டும் மானியம் கணக்கிடுதல் வேண்டும்.

**பொதுவான அறிவுரைகள்:**

இறுதி கற்பிப்பு மானிய கூட்டமானது காலை 9.30 மணிக்கு துவங்கி மாலை 5.30 மணி வரை நடைபெற வேண்டும். ஒரு மணி முதல் இரண்டு மணிவரை உணவு இடைவேளை அளிக்கப்பட வேண்டும்.

- ❖ மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் நிதியுதவி பள்ளிகளின் பெயர் பட்டியல்களையும் தொகுத்துக் கொள்ள வேண்டும்.
- ❖ ஒரு வட்டாரக் கல்வி அலுவலருக்கு குறைந்தபட்சம் காலையில் 5 பள்ளிகளும், மாலையில் 5 பள்ளிகளும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இப்பள்ளிகள் ஒதுக்கீடானது அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம்.
- ❖ அவ்வாறு பள்ளிகள் ஒதுக்கீடானது சார்ந்த ஒன்றியத்தைச் சேர்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு வராமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இப்பணிகள் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நிலுவைப் பலன்களைப் பெற்று வழங்குவதில் நிருவாக சிக்கல் ஏற்படாமல் இருக்கவும், கற்பிப்பு மானியப் பட்டியல் மற்றும் பராமரிப்பு மானியம் விடுவித்தல் ஆகியவற்றிற்கான ஆணைகளை கூட்டம் நடைபெறும் இடத்திலேயே வழங்கப்பட வேண்டும். அதற்கு ஏதுவாக முதன்மைக் கல்வி அலுவலகப் பணியாளர்களை உட்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்காண் பணிகளானது மாவட்டக் கல்வி அலுவலர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு, முற்றிலும் அவர்களது கண்காணிப்பில் முதன்மைக் கல்வி அலுவலர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டும்

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் சார்ந்த பணியாளர்களுடன் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, COVID-19 வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றி இறுதிக் கற்பித்தல் மான்யம் விடுவித்தல் பணி நடைபெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும், வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் தகுந்த அறிவுரைகளை வழங்கி இப்பணி சார்பாக எவ்வித புகாருக்கும் இடமின்றி செயல்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இப்பொருள் சார்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை 15.03.2022க்குள் இயக்குநருக்கு தவறாது அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஆய்வு செய்யப்பட்ட இறுதி கற்பிப்பு மானியத்தில் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்ட விவரத்தினை பயன்பாட்டுச் சான்றுடன் அனுப்பி வைக்குமாறும், மீதமுள்ள தொகையினை இவ்வியக்ககத்திற்கு 31.03.2022க்குள் சரண் செய்யுமாறும் இவ்விவரத்தினை தனிநபர் மூலம் சிறப்புநிலை கருதி அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

மேலும், இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்பி வைப்பதுடன், அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் சார்புச் செய்து, அதன் ஒப்புதலை அலுவலகக் கோப்பில் வைக்குமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக்கல்வி இயக்குநர்

பெறுநர்

1.அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் மூலமாக)

2.அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்